இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 90 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 24 – திங்கள்கிழமை 10 நவம்பர் 2025 – கோவை ★★ 28 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 90: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 24 - Monday 10 November 2025 - Kovai ★★ 28 Pages ₹ 5.00

எத்தனை போராட்டங்கள்! எத்தனை சிறைவாசங்கள்! உழைத்த உழைப்பு சாதாரண உழைப்பல்ல!

தி.மு.க. போன்ற ஒரு இயக்கம் இனி தோன்ற முடியாது!

"தி.மு.க. 75 – அறிவுத் திருவிழா": "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு – தி.மு.க. 75"

நூலை வெளியிட்டு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, நவ.10 -

"எத்தனை போராட்டங்கள்! எத்தனை சிறைவாசங்கள்! எத்தனை தியாகங்கள்! உழைத்த உழைப்பு சாதாரண உழைப்பல்ல! தி.மு.க. போன்ற ஒரு இயக்கம் இனி தோன்ற முடியாது" என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "தி.மு.க. 75 - அறிவுத் திருவிழா" நிகழ்வைத் தொடங்கி வைத்து உரையாற்றும்போது பெருமிதத்துடன் கூறினார்.

கழகத்தலைவர்-முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், கழக இளைஞரணி சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் "திமுக 75 - அறிவுத்திருவிழா" நிகழ்வைத் தொடங்கி வைத்து, "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு - திமுக 75" நூலை வெளியிட்டு ஆற்றிய உரை வருமாறு:-

கருப்பு சிவப்புக் கொள்கையைத் தாங்கி, களத்தில் பணியாற்றும் இளைஞரணிப் பட்டாளம் இங்கே கூடியிருப்பதைப் பார்க்கும்போது,

எனது அன்பான வணக்கம்!

விழாவிற்குப் பொருத்தமான தலைப்பிட்ட உதயநிதி!

தி.மு.க.வின் 75 ஆண்டுப் பயணத்தை நினைவுகூரும் இந்த விழாவிற்கு, "அறிவுத் திருவிழா" என்று உதயநிதி பெயர் வைத்திருக்கிறார். இதைவிடப் பொருத்தமான தலைப்பு வேறு இருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

கழகத்தைத் தொடங்கியது திருவள்ளுவர் கோட்டமே திராவிடக் கோட்டமாக மாறி இருப்பதைப் பார்த்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இளைஞரணி முன்னெடுக்கும் "கொள்கைத் திருவிழா"

'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' எனும் அறிவுக் கருவூலத்தைத் தமிழ்ச் சமூகத்துக்கு அளிக்கின்ற நூல் வெளியீட்டு விழா, தமிழ்நாட்டின் லட்சியக் கொடியாக விளங்கும் நம்முடைய கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடிக்கு வயது 75 என்பதை முன்னிட்டு வரலாற்றுக் கண்காட்சி, இருநாள் கருத்தரங்கம் முற்போக்குப் புத்தகக் கண்காட்சி என்று இளைஞரணி முன்னெடுத்திருக்கும் இந்தக் கொள்கைத் திருவிழாவில் பங்கெடுத்துள்ள உங்கள் அனைவருக்கும் "அறி"ஞர் அண்ணா! ஐம்பதாண்டு காலம் அதைக் கட்டிக் காத்தவர் முத்தமிழ் "அறி"ஞர்! கழகத்தின் முதல் தலைமையகம் பெயர் "அறி" வகம்'! தலைவர் கலைஞர் கட்டிய தற்போதைய தலைமையகத்தின் பெயர் "அறி"வாலயம்'! இவ்வாறு, அறிவை மையப்படுத்தி, அறிவொளியைப் பரப்புவதையே தலையாய கடமையாக நினைத்து இயங்கி வரும் கட்சியின் 75ஆம் ஆண்டுக் கொண்டாட்டத்தை, 'அறிவுத் திருவிழா' என்று சொல்லாமல், வேறு என்ன சொல்லி அழைக்க முடியும்?

தலைவர் கலைஞர் விரும்பிய அறிவுத் திருவிழாவை ஏற்பாடு செய்த 'கொள்கை இளவல்' உதயநிதி!

உலகப் பொதுமறை வழங்கிய வள்ளுவருக்கான இந்தக் கோட்டத்தில், தலைவர் கலைஞர் விரும்பிய அறிவுத் திருவிழாவை ஏற்பாடு செய்துள்ள, இளைஞர் அணிச் செயலாளர் 'கொள்கை இளவல்' தம்பி உதயநிதி அவர்களையும் அவருக்குத் துணை நிற்கும் இளைஞரணி தம்பிமார்களையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்! தலைமைக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்!

நான் நினைத்ததை விடச் சிறப்பான ஏற்பாடுகள்!

கடந்த ஒரு மாத காலமாக, இந்த அறிவுத் திருவிழாவிற்கான பணிகளில் தம்பி உதயநிதி அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறார் என்று முரசொலியில் செய்திகள் வந்து கொண்டே இருந்தது... நானும், "சரி, அப்படி என்னதான் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள் என்று பார்ப்போம்" என்று காத்துக் கொண்டிருந்தேன்... எதையும் இடையில் கேட்கவில்லை. இப்போது இந்த அறிவுத் திருவிழாவைப் பார்த்த பிறகு சொல்கிறேன், "என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை என்று சொல்வதைவிட, நான் நினைத்ததைவிடச் சிறப்பாகவே ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்!".

அய்யன் வள்ளுவர் குறள் வழி நடந்து எனக்குப் பெருமைச் சேர்க்கிறார் உதயநிதி!

வள்ளுவர் கோட்டத்தில் நின்று சொல்கிறேன்... தம்பி உதயநிதியின் கொள்கைப் பிடிப்புமிக்க செயல்பாடுகளைப் பார்க்கிறபோது, அய்யன் வள்ளுவர் சொன்னாரே,

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்!"

என்ற குறளுக்கேற்ப தம்பி உதயநிதி செயல்படுகிறார் என்று பெருமையுடன் சொல்கிறேன். அந்தப் பெருமையோடு அவருக்கு ஒரு வேண்டுகோளும் வைக்க விரும்புகிறேன். ஏன் என்னுடைய அன்புக் கட்டளை என்று கூட சொல்லலாம்.

இந்த அறிவுத் திருவிழாவை ஆண்டுதோறும் நடத்திடுக!

இந்த அறிவுத்திருவிழாவை இத்தோடு நிறுத்திவிடாமல், தொடர்ந்து ஆண்டுதோறும் நீங்கள் நடத்திட வேண்டும். நிச்சயம் இளைஞரணி இதைச் சிறப்பாக நடத்தும் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு.

முழுக்க முழுக்க சாமானியர்களால் தொடங்கப்பட்டு, 1967இல் முதல் மாநிலக் கட்சியாக ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்த கழக வரலாற்றை, இன்று வரை மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்களில், பல ஆய்வாளர்கள் ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கிறார்கள். "ஏதோ கட்சியைத் தொடங்கினோம், அடுத்த முதலமைச்சர் நான்தான்" என்று அறிவித்தோம் என்று நாம் ஆட்சிக்கு வரவில்லை.

தி.மு.க.வின் உழைப்பு, சாதாரண உழைப்பல்ல!

கழகத்தின் தலைவர்களில் இருந்து, கடைக்கோடித் தொண்டர் வரை, சுற்றிச் சுழன்று பணியாற்றினார்கள். 18 ஆண்டுகள் உயிரைக் கொடுத்து ஒவ்வொருவரும் உழைத்தார்கள்! எத்தனை பத்திரிகைகள்! எத்தனை புத்தகங்கள்! எத்தனை கூட்டங்கள்! எத்தனை கொள்கை வகுப்பெடுக்கும் நாடகங்கள், திரைப்படங்கள்! எத்தனை போராட்டங்கள்! எத்தனை சிறைவாசங்கள்! எத்தனை தியாகங்கள்! எத்தனை துரோகங்கள்! தி.மு.க. உழைத்த உழைப்பு, சாதாரண உழைப்பல்ல!

நாம் பெற்ற வெற்றி; இனி யாரும் படைக்க முடியாத வரலாற்றுச் சாதனை!

சமூகத்தில் சரிபாதி மக்கள் படிப்பறிவு கூட இல்லாமல் இருந்த காலத்தில், குக்கிராமத்தில் இருக்கும் முடிதிருத்தும் சலூன் கூட மக்களின் சிந்தனையைத் திருத்தும் மையமாகச் செயல்பட்டது. சைக்கிள் கடை, டீக்கடை என்று ஒரு இடம் விடாமல்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

நான் நினைத்ததைவிட சிறப்பாகச் செயலாற்றுகிறார்!

கடந்த ஒரு மாத காலமாக, இந்த அறிவுத் திருவிழாவிற்கான பணிகளில் தம்பி உதயநிதி அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறார் என்று முரசொலியில் செய்திகள் வந்துகொண்டே இருந்தது... நானும், "சரி, அப்படி என்னதான் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள் என்று பார்ப்போம்" என்று காத்துக் கொண்டிருந்தேன்... எதையும் இடையில் கேட்கவில்லை. இப்போது இந்த அறிவுத் திருவிழாவைப் பார்த்த பிறகு சொல்கிறேன், "என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை என்று சொல்வதைவிட, நான் நினைத்ததைவிடச் சிறப்பாகவே ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்!".

அய்யன் வள்ளுவர் குறள் வழி நடந்து எனக்குப் பெருமைச் சேர்க்கிறார் உதயநிதி!

வள்ளுவர் கோட்டத்தில் நின்று சொல்கிறேன்... தம்பி உதயநிதியின் கொள்கைப் பிடிப்புமிக்க செயல்பாடுகளைப் பார்க்கிறபோது, அய்யன் வள்ளுவர் சொன்னாரே,

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்!"

என்ற குறளுக்கேற்ப தம்பி உதயநிதி செயல்படுகிறார் என்று பெருமையுடன் சொல்கிறேன்.